# மறுமலர்ச்சியின் அடிச் சுவடுகள்

## 2019 - 2021

*கரடுமுறடான பாதையில்*
*வெற்றியை நோக்கி*
*கூட்டாகக் கடந்து வந்த*
*பயணத்தின்*
*நினைவலைகள் ......*




சிறைச்சாலைகள்
திணைக்களம்

# கௌரவ நீதி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



**சனாதிபதி சட்டத்தரணி**
**எம்.யூ.எம். அலி சப்ரி**
நீதி அமைச்சர்

சிறைச்சாலைகள் திணைக்களத்தைப் புதிய பதையில் இட்டுச் செல்வதற்காக கடந்த ஐம்பது வருட காலப்பகுதியினுள் செயற்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட "மறுமலர்ச்சியின் அடிச் சுவடுகள்" என்ற இந்த நூலுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்கக் கிடைத்தமை தொடர்பாக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாடொன்றின் குற்றவியல் நீதி நிருவாகச் செயன்முறைமையின் இறுதிக் கட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு, தற்போதைய அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் தொலைநோக்கு" நாட்டைக் கட்டயொழுப்பும் வேலைத்திட்டத்திற்கு அமைவாகக் கையளிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்கள் சிறியதொன்றல்ல என்பது நாம் அனைவரும் நான்றாக அறிந்த ஒரு விடயமாகும். நாட்டினுள் காணப்படுகின்ற நீதிமன்ற முறைமைக்குள் சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்படுகின்ற சந்தேகநபர்களை நீதிமன்றச் செயற்பாடுகள் முடிவடிடையும் வரை சிறைச்சாலைகளில் தடுத்துவைத்துக் கொண்டு மற்றும் பாதுகாத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்று சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து சிறந்த பிரசைகளாக மீண்டும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் பாரியபொறுப்பும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் குறிப்பிடத்தக்களவு பணிப்பொறுப்புக்களைச் சிறைச்சாலைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட வேண்டியுள்ளது.

சிறைச்சாலைகளின் மறுசீமைக்கப்பட வேண்டிய பிரிவுகளை இனங்கண்டு , அந்த மறுசீரமைப்புக்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பாக ஐந்தாண்டு திட்டமொன்றை வகுத்து அந்தத்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக கடந்த ஒன்டறை வருடத்தினுள் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் பல செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விசேடமாக புதிய செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் போது, குறிப்பாக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் ஊடாக கைதிகளின் நலனை மேம்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு, சிறைச்சாலையினுள் இருந்துகொண்டு சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைந்த நிலைமையொன்றுக்கு கொண்டு வருவதற்கும் சாத்தியம் கிடைத்தமை கடந்த ஒன்டறை வருட காலப்பகுதினுள் சிறைச்சாலைகள் திணைக்களம் பெற்றுக் கொண்ட பாரிதொரு வெற்றியாகும்.

அதேபோன்று, நீதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், பொலீஸ் திணைக்களம் மற்றும் ஏனைய பொறுப்புக் கூறவேண்டிய நிறுவனங்களின் பங்களிப்புடன் 2020 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம்

சிறைகளில் காணப்பட்ட 32,000 வரையான கைதிகளின் எண்ணிக்கையை 20,000 வரை குறைத்துக் கொள்வதற்கு முடிந்தமையூடாக சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குக் காணப்பட்ட பாரியதொரு நெருக்கடிக்குத் தீர்வு கிட்டியது. மேலும் சிறைச்சலைகளில் காணப்படுகின்ற அதிக இடநெறுக்கடிக்குத் தீர்வொன்றாகவும் மற்றும் நெல்சன் மண்டேலா விதிகள் போன்ற சர்வதேச தரத்துக்கு இணங்கியதாகவும் கைதிகளுக்கு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் கொழும்பு சிறைச்சாலை வளாகத்தை ஹொரணை பிரதேசத்தில் உள்ள 200 ஏக்கர் காணியில் மீள அமைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளபட்டு வருகின்றன. அதன் மூலம் புனர்வாழ்வளித்தல் வழிமுறையை விதிமுறைப்படுத்தல் மற்றும் சிறைச்சாலை அலுவலர்களுக்கு போதிய வசதிகளுடன் அவர்களின் கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான பொருத்தமான சூழ்நிலையொன்று உருவாக்கப்படும்.

அதேபோன்று, நீதி அமைச்சின் தலைமையில் 1844 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க சிறைச்சாலைகள் சட்டத்தில் சமகாலத்திற்குப் பொருத்தமான திருத்தங்களைச் செய்து, இற்றைப்படுத்தி, சர்வதேச தரத்திலான பிரதானமான பெறுமானங்களை எமது சிறைச்சாலைகள் முறைமையில் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஏற்கனவே சிறைச்சாலைகள் திணைக்களம் தனது விசேடமான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பலமிக்கதாக அர்ப்பணிப்புச் செய்கின்றமை தெளிவான விடயமொன்றென்பதோடு, அந்த அர்ப்பணிப்புக்கள் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைந்து வருகின்றன என்பதும், இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட சிறைச்சாலைகள் முறைமை மற்றும் தற்போது காணப்படுகின்ற சிறைச்சாலைகள் முறைமை ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது தெளிவாகத் தெரிகின்ற ஒரு நிலைமையாகும். அதன்பிரகாரம், விடயப்பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பில் மகிழ்ச்சியடைவதோடு, அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற அனைத்து அலுவலர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து முயற்சிகளும் வெற்றிகரமாக அமையட்டும் என வாழ்த்துகின்றேன். இறுதியாக எமக்கு பெரும்பாலானவைகளை மாற்றம் செய்வதற்காகச் சிந்திப்பதற்குத் தூண்டிய தென்ஆபிரிக்க சனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்கள் தெரிவித்த கூற்றொன்றை மேற்கோள் காட்டி குறிப்பிடுகின்றேன்.

" for to be free is not merely to cast off one's chains, but to live in a way that respects and enhances the freedom of others "

அந்த கூற்றின் பிரகாரம், விடுதலை என்பது, ஒருவரின் சங்கிலிகளைக் அகற்றுவது மாத்திரமன்றி, அடுத்தவர்களின் சுதந்திரத்தைக் மதிக்கின்ற மற்றும் மேம்படுத்துகின்ற முறையில் வாழ்வதற்கான சுற்றுச்சூழலைத் தயார் செய்தலும் ஆகும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து சிறைச்சாலைகள் திணைக்களத்தை வழிநடாத்த வேண்டியிருப்பது, ஒட்டுமொத்த மனித இனத்திற்கான உயர்ந்த பட்சமான நனமைகளை வழங்குவதற்காகவாகும்

# அமைச்சின் செயலாளரின் செய்தி




**மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) வீ.ஆர். சில்வா**

ஆர்எஸ்பீ, விஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டியூ, அய்பீ

**செயலாளர்**

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகளைப் புனர்வாழ்வளித்தல் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு


புனர்வாழ்வுச் செயற்பாடுகளை மிகவும் ஒழுங்கான முறையில் மேற்கொள்வதற்கும், அதன் மூலம் சிறைக்கைதிகளின் தண்டனைக் காலம் முடிவடைந்து மீண்டும் சமூகத்தில் இணையும் போது மிகவும் சிறந்த பண்புகளைக் கொண்ட சமூகத்திற்குப் பயனுள்ள மனிதரொருவராக மாற்றியமைப்பது சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக சிறைச்சாலைகள்திணைக்களத்தினால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

தற்காலத்தில் சிறைச்சாலைகள் நிர்வாகம் எதிர்கொண்டுள்ள பிரதானமான சவால் யாதெனில், சிறைச்சாலைகளுக்குள் நிலவுகின்ற பாரிய இடநெருக்கடியாகும். இச் சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்ளவதற்காக தற்போது இந்தத் திணைக்களத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டைக் கட்டியொழுப்புகின்ற சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய, நவீன வசதிகள் கொண்ட சிறைச்சாலைகள் பலவற்றை நிர்மாணிப்பதற்குத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. சர்வதேச தரத்துக்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்ட அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை தற்போது செயற்பட்டு வருகின்றது. சிறைக்கைதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக, நீண்டகாலப் புனர்வாழ்வுக்குத் தேவையான ஏற்பாடுகளை வழங்குவதும் இதன் நோக்கமாகும்.

பாரிய வகை குற்றவாளிகளால் சிறைச்சாலைகளினுள் மேற்கொள்ளப்படுகிறதுபல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் செயற்பாடுகள் காரணமாக சமூகத்தில் பிரச்சினைக்குரிய நிலைமைகள் கடந்த பல வருடங்களாக ஏற்பட்டன. இவ்வாறான பாரிய வகை குற்றவாளிகளைத் தனியாகத் தடுத்து வைத்துக் கொள்வதற்காக பூஸ்ஸ சிறைச்சாலையை மிகப் பாதுகாப்பான சிறைச்சாலையாக அபிவிருத்தி செய்வதற்கு முடிந்தமை சிறைச்சாலைகள் திணைக்களம் அடைந்துகொண்ட விசேடமான வெற்றியொன்றாகுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை பாரம்பரியமாக சிறைச்சாலைளினுள் தடுத்துவைத்துக் கொண்டு புனர்வாழ்வளிப்பது குறைந்த பெறுபேறுகளைக் கொண்ட வழிமுறையொன்றென்பதைக் கண்டறிந்து அவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல் மற்றும் சிகிச்சையளித்தல் ஆகியவற்றுக்காக வீரவில சிறைச்சாலையினுள் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்காக திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும்.

திணைக்களத்தின் உளவு மற்றும் பாதுகாப்புப் பிரிவு உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சியொன்றை வழங்கி இலங்கை சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை தந்திரோபாயப் படையணியாக வலுவூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு, இந்தப் பிரிவிற்கு நவீன தொழில்நுட்பப் பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதன் மூலம் சிறைச்சாலையினுள் நடைபெறுகின்ற பல்வேறுபட்ட முறைகேடுகள் மற்றும் ஊழல்களை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்களைத் துரிதமாக மேற்கொண்டு சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பதற்குரிய பாரிய முன்னேற்றமொன்றை வெளிகாட்டியுள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தின் எதிர்கால இலக்குகளை அடைந்துகொள்வதற்கு சாத்தியங்கள் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு, இந்தப் பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**எச்.எம்.ரீ.என். உபுல்தெனிய**
**சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்**

# "ஆரம்பம்"

நாட்டில் காணப்படுகின்ற நீதிமன்ற முறைமையின் மூலம் சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்படுகின்ற சிறைக்கைதிகளைச் தடுத்து வைத்திருத்தல், பாதுகாப்பு வழங்குதல் மற்றும் சீர்திருத்துதல் ஆகிய பிரதான நோக்கங்களின் ஊடாகச் செயற்பட்டு நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகப் பாரிய பணிப்பொறுப்புக்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குக் காணப்படுகின்றன.

இந்தப் பணிப்பொறுப்புக்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு மிகவும் இலகுவாக நிறைவேற்றக் கூடிய ஒன்றல்ல என்தோடு, மிகவும் அர்ப்பணிப்புடன், கஷ்டங்கள், ஆபத்துக்கள், சவால்கள் மற்றும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஆற்றப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும், சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்படுகின்றவர்களில் பெரும்பாலானோர் சமூகத்தின் முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுக்கும் எதிராகச் செயற்பட்டதன் விளைவாக, நாட்டின் நீதிமன்ற முறைமையில் குற்றவாளிகள் அல்லது சந்தேகநபர்களாக ஆக்கப்பட்ட நபர்கள் என்பதோடு அவர்களை முகாமைத்துவம் செய்வது மிகவும் கட்டுப்பாடுடன்,தொலை நோக்குடனான ஞானத்துடன் மற்றும் தந்திரோபாயமாக மேற்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

அதற்மைய, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்காக கடந்த காலப்பகுதியினுள் சிறைச்சாலைகளின் நிர்வாக ரீதியான மாற்றங்களுடன் தொடர்புடைய மீளமைப்பு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அன்று தொடக்கம் கடந்த ஒரு வருட காலப்பகுதியினுள் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த நடவடிக்கைகள் தொடர்பான சுருக்கம் மற்றும் அவற்றின் வெற்றிக்கள் தொடர்பாக இதனூடாகச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

மேலும், கடந்த ஒரு வருட காலத்தியினுள் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட பணிப்பொறுப்புக்கள் தனியாக மேற்கொள்ளப்பட்டவைகள் அல்ல என்பதோடு, பல்வேறுபட்ட திணைக்களங்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களின் பாரிய ஒத்துழைப்புக்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு செயல்பாடாகும். ஆகவே, கடந்த ஒரு வருட காலத்தின் போது இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய சகல பங்குதார தரப்பினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதற்கு இசதனை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன்.



“

உங்களுக்குச் செய்ய முடியாதவைகளை
என்னால் செய்ய முடியும்
என்னால் செய்ய முடியாதவைகளை
உங்களால் செய்ய முடியும்
நாம் கூட்டாகப் பணியாற்றினால்
எவரொருவருக்கும்
செய்ய முடியாத ஒன்றைச்
செய்ய முடியும்.

*– அன்னை தெரேசா அவர்கள்.*

# மறுமலர்ச்சியின் முன்னோடிகள்



**துசித இன்திரஜித் உடுவர**
மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (க.நி)
சிறைச்சாலைகள் ஆணையாளர் (வழிநடாத்தல்/உளவுப் பாதுகாப்பு)



**சந்தன ஏக்கநாயக்க**
சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு)
சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர்

**மலின் லியனகே**
சிறைச்சாலை ஆணையாளர் (கைத்தொழில்)



**சுனில் கொடித்துவக்கு**
சிறைச்சாலை ஆணையாளர் (வழங்கல், சேவைகள்)





**பொறியியலாளர் டபிள்யு.எம்.பீ.பி வீரசிங்க**
பணிப்பாளர் ( பொறியியல்



**அனுராத ராஜசிங்க**
சிறைச்சாலை ஆணையாளர் (நிதி)

**சுரஞ்சி விஜயவர்த்தன**
பணிப்பாளர் (திட்டமிடல்)



**டி.எம்.பி. கருணாரத்ன**
ஆணையாளர் (உள்ளகக் கணக்காய்வு)





**வைத்தியர் ஹேமந்த ரணசிங்க**
பிரதிப் பணிப்பாளர் (சிறைச்சாலை வைத்திய சேவைகள்)



**ஜகத் வீரசிங்க**
ஆணையாளர் (சிறைச்சாலைகள் அத்தியட்சகர்)

# ஐந்தாண்டுகாலத் திட்டம்




‘A RIGHT BASED CORRECTIONAL SYSTEM FOR A SAFER SOCIETY’

‘A Right Based Correctional System for a Safer Society’ என்ற தொனிப்பொருளின் கீழ் 2021 - 2025 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு சிறைச்சாலைத் திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட பிரதான 09 துறைகளை உள்ளடக்கியதாக இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை அடைந்துகொள்வதற்காக இந்த ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 01 | சிறைச்சாலைகளின் இட நெருக்கடியைக் குறைத்தல் |
| 02 | சிறைச்சாலைகள் முகாமைத்துவ மறுசீரமைப்பு |
| 03 | சிறைச்சாலைப் பணியாட்குழுவினர்களின் திறன் விருத்தி |
| 04 | சிறைச்சாலை சட்டங்களைப் மறுசீமைத்தல் |
| 05 | சிறைச்சாலைப் பாதுகாப்புச் செயற்பாடுகளை விதிமுறைப்படுத்தல் |
| 06 | சிறைச்சாலை சுகாதார சேவைகளை மேம்படுத்துதல் |
| 07 | சிறைக் கைதிகளின் சீர்திருத்தச் செயற்பாடுகளை வலுப்படுத்தல் மற்றும் ஊழியர் படையணியை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் |
| 08 | பெண்கள் சிறைச்சாலைகள் மற்றும் இளம் தவறாளிகளின் பயிற்சி நிலையங்களை புனரமைப்புச் செய்தல். |
| 09 | e- சிறைச்சாலை எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தல் |

# சிறைக் கைதிகளுக்கு இடவசதி – சிறைச்சாலைகளின் இட நெருக்கடியைக் குறைத்தல்




இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கீழ் நிறுவகிக்கப்படுகின்ற நிறுவன முறைமையினுள் தடுத்துவைக்கக்கூடிய மொத்த சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 13241 மாத்திரமாகும். இருந்த போதிலும், பல வருடங்களாக இந்தக் கொள்ளளவை விட அதிகமான கைதிகள் சிறைப்படுத்தப்பட்டு வருவதோடு, வரலாற்றில் ஒருபோதும் இடம்பெறாதவாறு 2020 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்தில் இந்தக் கைதிகளின் எண்ணிக்கை 32,000 வரை அதிகரித்துச் சிறைச்சாலை நிறுவனங்களினுள் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகள் ஏற்பட்டதோடு, அந்த நெருக்கடியான நிலைமைகளில் கொவிட் - 19 தொற்றுநோய் காரணமான பல மடங்கு கடுமையான தாக்கங்கள் ஏற்பட்டன.

இது தொடர்பாக அதிமேதகு சனாதிபதி அவர்களின் விசேட கவனம் ஈர்க்கப்பட்டதோடு, கௌரவ நீதி அமைச்சர் சனாதிபதி சட்டத்தரணி திரு.அலி சப்ரி அவர்களினதும் மற்றும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகளின் புனர்வாழ்வு அலுவல்கள் தொடர்பான கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு. லொஹான் ரத்வத்தை அவர்களினதும் அறிவுறுத்தல்களின் பேரில் இலங்கை பொலீஸ் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களுடன் கலந்துரையாடி சிறு குற்றங்கள் மற்றும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்பட்டிருந்த 13,000 இற்குக் கிட்டிய கைதிகளுக்கு பிணை வழங்கப்பட்டு சமூகமயப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இது தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களை மீளாய்வு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# தேசிய பாதுகாப்பு /சமூகப் பாதுகாப்புக்கான சனாதிபதி செயலணியின் பணிப் பொறுப்புக்கள்




நாட்டின் நீதிமன்ற முறைமை மூலம் குற்றவாளிகள்/ சந்தேக நபர்கள் என்ற அடிப்படையில் சிறையில் அடைக்கப்படுகின்ற பாதாள குழுக்களின் அங்கத்தவர்கள், பாரியளவு போதைப்பொருள் வியாபாரிகள் நாட்டில் உள்ள பல்வேறு சிறைச்சாலை நிறுவனங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததோடு அவர்கள் சிறைச்சாலை நிறுவனங்களின் நிருவாகத்திற்குப் பலத்த சவாலாகக் காணப்பட்டனர். அவர்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கீழ் நிலை உத்தியோகத்தர்கள் போலவே சிரேட்ட நிலை உத்தியோகத்தர்கள் வரை சவால்களை விடுத்து அச்சுறுத்தி நிர்வாகத்திற்கு இடையூறுகளை எற்படுத்தி செயற்படுக்கின்ற நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

அதற்கமைய, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அவர்களின் தலைமையில் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களும் அங்கத்துவம் வகிக்கின்ற "பாதுகாப்பான நாடு, ஒழுக்காமான மற்றும் சட்டத்தை மதிக்கின்ற சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணி" ஊடாக இவர்களின் சட்டவிரோதச் செயற்பாடுகளை நிறுத்தி நாட்டின் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சிறைச்சாலைகள் நிறுவனங்களின் நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு, பூஸ்ஸ அதிஉயர் பாதுகாப்புச் சிறைச்சாலையை அமைத்து பலத்த கண்காணிப்பு முறையின் கீழ் இந்தக் கைதிகளை தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### பூஸ்ஸ அதியுயர் பாதுகாப்புச் சிறைச்சாலை தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள்.

**01** சமூகத்திற்கு மிகுந்த அச்சுறுத்தலாகவுள்ள நாட்டின் பிரதான பாதாள குழுக்களின் தலைவர்களைத் தடுத்து வைத்தல்.

**02** பாரியளவிலான போதைப்பொருள் வியாபாரிகளை வேறுபடுத்தி தடுத்து வைத்தல்.

**03** பலத்த பாதுகாப்புத் தேவைப்படுகின்ற மற்றும் வெளி அச்சுறுத்தல் காணப்படுகின்ற கைதிகளுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குதல்.

**04** விசேட வகையான கைதிகளை ஒரே இடத்தில் தடுத்து வைத்துக்கொள்வதன் மூலம் முகாமைத்துவம் செய்வதற்கு வசதியாக அமைதல் மற்றும் விசேட கவனம் செலுத்தக்கூடிய சாத்தியப்பாடு.

**05** தேசிய பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்புக்கு ஆகியவற்றில் செல்வாக்குச் செலுறத்துகின்ற கைதிகளை அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதவாறு வேறுபடுத்தி தடுத்துவைத்தல்

### பூஸ்ஸ அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலை தாபிக்கப்பட்டதால் ஏற்பட்டது முன்னேற்றம்.

**01** சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குக் காணப்பட்ட குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் மிகக் குறைந்த நிலைமைக்கு வருதல்.

**02** இந்த நிறுவனத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தரப்பினர்களை முகாமைத்துவம் செய்யும்போது சிறைச்சாலை அலுவலர்களுக்கு முன்னர் காணப்பட்ட நெருக்கடியான நிலைமைகள் மற்றும் அச்சுறுத்தல் என்பன குறைவடைதல்.

**03** போதியளவு பாதுகாப்பின் கீழ் விசேட வகைக் கைதிகளைத் தடுத்து வைத்துக் கொள்வதற்குச் சாத்தியம் கிடைத்தமை.

**04** சிறைச்சாலைக்குள் இருந்துகொண்டு குற்றச்செயல்களை வழிநாடாத்துதல், போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுதல், கப்பம் பெறுதல் மற்றும் அச்சுறுத்தல் விடுத்தல் என்பனவற்றைக் குறைத்துக் கொள்வதற்கு முடிந்தமை.

# தொலைபேசி சிறைச்சாலைகளுக்கு ஒரு சவால்.

கைதிகளை சிறைச்சாலைக்குள் இருந்துகொண்டு போதைப்பொருள் வியாபாரங்களை வழிநடாத்துதல், கப்பம் பெறுதல் மற்றும் ஏனைய குற்றச் செயல்களை மேற்கொள்வதற்காக வழிநடாத்துதல் என்பவற்றை மேற்கொள்வதாக தொடர்ச்சியாக குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலைமை எற்படுவதற்கு பிரதானமான காரணம் கையடக்கத் தொலைபேசிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் கரங்களுக்கு கிடைக்கப் பெறுவதாகும்.

ஆதலால், சிறைச்சாலைகளினுள் தொலைபேசி சமிக்ஞை தடையேற்படுத்தல் (தடுப்பு) முறைமைப் பொருத்துவதன் நோக்கம் கைதிகள் சிறைச்சாலையினுள் இருந்து தொலைபேசி அழைப்புகளைப் பெற்றுக் கொள்ளவதனை தடுப்பதாகும். அதற்கமைய, தற்பொழுது,

வெலிக்கடை சிறைச்சாலை
அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை
பூஸ்ஸ சிறைச்சாலை
நீர்கொழும்பு சிறைச்சாலை
களுத்துறை சிறைச்சாலை

ஆகிய நிறுவனங்களில் இந்த தொலைபேசித் சமிக்ஞை தடையேற்படுத்தல் முறைமை தாபிக்கப்பட்டுள்ளதோடு மஹர, களுத்துறை, மற்றும் தும்பர ஆகிய நிறுவனங்களில் இந்த முறைமையைத் தாபிப்பதற்காகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படுகின்ற பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறது.






## சிறைச்சாலைக்கு இரண்டாவது கண்ணொன்றைத் தாபித்தல்

சிறைச்சாலை நிறுவனங்களில் பாதுகாப்பு கெமரா முறைமையை தாபித்தல் சிறைச்சாலை நிறுவனங்களுக்குள் மற்றும் வெளியில் பாதுகாப்பை உறுதிசெய்தல், சிறைச்சாலைகளின் அன்றாடச் செயற்பாடுகளை வழிநடாத்துதல் மற்றும் மேற்பார்வையை இலகுபடுத்தல் மற்றும் நிறுவனத்திற்குள் மற்றும் அதற்கு வெளியில் ஏற்படக்கூடிய முறைகேடான செயற்களைக் குறைத்தல் என்பன முக்கியமானவையாகும்.

அதற்கமைய, தற்போது அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை, பூஸ்ஸ சிறைச்சாலை மற்றும் களுத்துறை சிறைச்சாலை ஆகிய நிறுவனங்களில் பாதுகாப்புக் கெமரா முறைமைகள் தாபிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதே போன்று வெலிக்கடை சிறைச்சாலை, கொழும்பு மறியல் சிறைச்சாலை, புதிய மெகசின் சிறைச்சாலை , வெலிக்கடை சிறைச்சாலை பெண்கள் பிரிவு மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலை என்பன அமையப்பெற்றுள்ள கொழும்பு சிறைச்சாலை வளாகத்தை உள்ளடக்கியதாக பாதுகாப்புக் கெமரா முறைமையைத் தாபிப்பதற்கான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, மஹர, மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் கெமரா முறைமையைத் தாபிப்பதற்குத் தேவையான ஆரம்ப கட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

# குழு உணர்வோடு குறிக்கோளுக்காக அர்ப்பணிப்புச் செய்வோம்





சிறைச்சாலைகளுக்குள் தடை செய்யப்பட்ட பொருட்கள் உள்ளே கொண்டு வரப்படுதல் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமை சிறைச்சாலைகளின் நிர்வாகத்தில் பாரிய சவாலாகக் காணப்படுவதோடு, அவற்றைக் குறைத்தல் மற்றும் சிறைச்சாலைகளுக்கு வெளியில் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் பொலீஸ் விசேட அதிரடிப்படை வீரர்கள் சிறைச்சாலை நிறுவனங்களிற்கு வெளியில் பாதுகாப்புக் கடமைகளுக்காக இணைப்புச் செய்யபட்டனர்.

அதன் பிரகாரம்,அவர்கள் சிறைச்சாலைகளில் பின்வரும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

- சிறைச்சாலைக்குள் பிரவேசிக்கின்ற சிறை/ சந்தேக நபர்களைச் சோதனை செய்தல்.
- சிறைச்சாலைக்குள் பிரவேசிக்கின்ற அதிகாரிகள் மற்றும் ஏனைய தரப்பினர்களைச் சோதனை செய்தல்.
- சிறைச்சாலைக்குள் பிரவேசிக்கின்ற அனைத்து வாகனங்கள்,பொருட்கள், பண்டங்களைச் சோதனை செய்தல்.
- சிறைச்சாலைக்குள் சிறைச்சாலைகளுக்கு வெளியில் சோதனை நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல்
- சிறைச்சாலைக்குள் சிறைச்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள CCTV மற்றும் தொலைபேசி சமிக்ஞை தடையேற்படுத்தல் முறைமை ஆகியவற்றின் மேற்பார்வைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- சிறைக் கைதிகளைப் பாதுகாத்தல்

தற்போது அவர்கள் அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை, பூஸ்ஸ அதியுயர் பாதுகாப்புச் சிறைச்சாலை, கொழும்பு சிறைச்சாலை வளாகம் ஆகிய நிறுவனங்களில் கடமைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

# சிறைக்கைதிகளுக்கு வெளிச் சமூகத்திற்குப் புதியதோர் பிரவேசம்



சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்படுகின்ற சிறை / சந்தேகக் கைதிகள் போன்று அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தமது உறவினர்களை சந்திப்பதற்கான வசதிகளை வழங்குவது மனித உரிம்மையொன்று போலவே சிறைச்சாலை நிர்வாகம் மற்றும் தொடர்புடைய உள்நாட்டு மற்றும் சர்வதேச ஒழுங்கு விதிகள் மற்றும் தரக் கட்டுப்பாட்டுக்கமைய உரிமையொன்றாகவும் காணப்படுகின்றது.

அதன்படி,

- உறவினர்களைச் சந்திப்பதற்காக காணப்படுகின்ற காலம் கடந்த வழிமுறை
- மிக நீண்ட தூரத்தில் இருந்து நேரம் மற்றும் பணம் ஆகியவற்றைச் செலவிட்டு வருவதற்கு நேரிடுகின்றமை
- தற்போதுள்ள முறைமையில் ஒழுங்கீனங்களுக்கு/ முறைகேடுகளுக்கு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை
- கொவிட்-19 போன்ற தொற்றுநோய் காலப்பகுதியிலும் தமது உறவினர்களை சந்திக்கச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

போன்ற விடயங்களைக் கவனத்திற்கொண்டு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கூறப்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக ***E-Visit*** எண்ணக்கரு அறிமுகம் செய்யப்பட்டது. இதன்கீழ் ***Pre Booked Visit*** எண்ணக்கரு மற்றும் ***Video Visitation*** ஆகிய முறைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

***Video Visitation*** முறைகளைப் பயன்படுத்தி விருந்தினர்களைக் காட்டும் அலுவல்கள் சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் சிறைகைதிகளைப் புனர்வாழ்வளித்தல் அலுவல்கள் கௌரவ இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை அவர்களின் தலைமையில் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இது தற்போது சிறைச்சாலைகள் பலவற்றில் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு எதிர்காலத்தில் நாட்டில் உள்ள சகல சிறைச்சாலை நிறுவனங்களிலும் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

## *PRE BOOKED VISIT* முறைமை


இம்முறைமையின் மூலம் சிறையில் சிறைப்படுத்தப்பட்டுள்ள தமது உறவினரைச் சந்திப்பதற்காக தினமொன்றையும் மற்றும் நேரமொன்றையும் வீட்டிலிருந்தவாரே குறித்தொதுக்கிக் கொள்ளும் வசதி உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தமது உறவினரைச் சந்திப்பதற்காக எவரேனும் நபர் ஒருவர் கோரிக்கையொன்றைச் செய்ததன் பின்னர் குறித்த சிறைச்சாலை நிறுவனத்தினால் அதற்காக நாள் மற்றும் நேரத்தைக் குறிப்பிட்டு குறுஞ் செய்தியொன்று வேண்டுகோள் விடுத்த நபரின் கையடக்கத் தொலைபேசிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அந்தத் தினத்தில் குறித்த நேரத்தில் சிறைச்சாலைக்கு வருகை தந்தவுடன் Pre Booked Visit முறையின் கீழ் வரிசைகளில் காத்திருக்காமல் தமது உறவினரைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

இதற்காக சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் இணையத்தள மென்பொருளொன்று உருவாக்கப்பட்டுள்ளதோடு, அதன் ஊடாக திகதி மற்றும் நேரத்தை குறித்தொதுக்கிக் கொள்வதற்னான சாத்தியப்பாடு காணப்படுகின்றது. இதனூடாக கைதிகளின் உறவினர்களுக்கு நேரத்தை வீணாக்காமல் பாதுகாப்பாகவும் மற்றும் விரைவாகவும் தமது உறவினரைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதோடு விருந்தினர்களைக் காட்டும் அலுவல்களையும் விதிமுறையாக மேற்கொள்வதற்கும் மற்றும் சிறப்பாக முகாமைத்துவம் செய்துகொள்வதற்கும் சிறைச்சாலை நிர்வாகிகளுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

## *VIDEO VISITATION* முறைமை

கைதிகள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு காணொளி தொழில்நுட்பத்தினூடாக தமது உறவினர்களை சந்திப்பதற்கும் , அவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் வாய்ப்புக் கிடைப்பதுடன், இந்த முறைமையின் மூலம் விசேடமாக வெளிநாட்டு சிறை.்.சந்தேக கைதிகளுக்குத் தமது உறவினர்களை பார்ப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்த முறையினூடாக,

- உறவினர்களுக்கு நேரம் மற்றும் பணத்தைச் செலவிட்டு சிறைச்சாலை வளாகத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லையென்பதோடு தமது வீட்டில் இருந்து கொண்டே தமது உறவினரைப் பார்ப்பதற்கும் மற்றும் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்/ உரையாடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.
- சிறைச்சாலைகள் நிறுவனங்களுள் காணப்படுகின்ற வரிசைகளில் காத்திருப்பற்குத் தேவையில்லை.
- சிறைச்சாலைக்குள் பிரவேசிக்கின்ற போது மேற்கொள்ளப்படுகின்ற சேதனை செய்யப்படுதல் போன்ற அசௌகரியங்களுக்கு உட்படமை.
- கொவிட் - 19 போன்ற தொற்றுநோய் நிலைமைகளிலிருந்து பாதுகாப்புக் கிடைத்தல்
- வெளிநாட்டு கைதிகளுக்கு தங்களின் உறவினர்களைப் பார்ப்பதற்கான.்். காண்பதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தல்.








## வீடியோ (காணொளி) தொழில்நுட்பத்தின் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகள்

சிறைக்கைதிகளை நீதிமன்றத்திற்குச் ஆஜர்படுத்துவதற்காக இணைய வழிமுறையொன்றின் தேவைப்பாடு பின்வரும் காரணங்களால் ஏற்பட்டுள்ளது.

- நாட்டில் தற்போது காணப்படுகின்ற கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக கைதிகளை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஆஜர்படுத்துவதன் மூலம் நீதிமன்றங்களினுள்ளும் கொவிட்-19 தொற்றுநோய் பரவக்கூடிய ஆபத்து நிலைமை.
- நீதிமன்ற அலுவலர்கள் போன்றே சிறைச்சாலை அலுவலர்களுக்கும் கொவிட் 19 தொற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றமை.
- நீதிமன்றங்களுக்கு கைதிகள் ஆஜர்படுத்தப்படாமையினால் கைதிகளின் வழக்கு விசாரணை நடவடிக்கைகளில் தாமதம்.
- விசேட வகுதிக் கைதிகள் சிறைச்சாலைக்கு வெளியே தாக்குதல்களுக்கு உட்படக்கூடிய வாய்ப்புகள்

இம்முறைமையின் மூலம் சிறைச்சாலை நிறுவனங்களுக்குத் தமது நீதிமன்ற நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறன் கொண்டதாகவும் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிட்டுவதோடு மற்றும் நாளாந்தம் கைதிகள் போக்குவரத்து செய்வதற்காகச் செலவிடப்படுகின்ற பெருந்தொகைப் பணமும் மீதமடையும். மேலும் இதனூடாக சிறைச்சாலைகள் நிறுவனங்களுக்குள் தடை செய்யப்பட்ட பொருட்கள் கொண்டு வரப்படுவதனையும் குறைத்துக் கொள்ள முடியும். விசேடமாக இந்த முறைமை மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதோடு, தேவைப்பாட்டுக்கமைய ஏனைய நீதிமன்றங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

இம்முறைமையை மேலும் விதிமுறைப்படுத்தும் கருத்திட்டமொன்றாக ஊழரசவ யுரவழஅயவழைெ கருத்திட்டம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதோடு அதனூடாக நீதிமன்றச் செயற்பாடுகளை கணினி மென்பொருளினூடாக நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகளுடன் தொடர்புபடுத்தி மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டம் கௌரவ நீதி அமைச்சர், சனாதிபதி சட்டத்தரணி திரு. அலி சப்ரி அவர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய நீதி அமைச்சின் செயலாளர் திரு. எம்.எம்.பீ.கே. மாயாதுன்ன அவர்களின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

# தண்டனைக்குப் பதிலாக புனஉவாழ்வு

சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்படுகின்ற கைதிகளில் 2/3 வரையான தொகையினர் சிறைப்படுத்தப்படுவது போதைப்பொருட்கள் தொடர்புடைய குற்றங்களுக்காகவென்பது அவதானிக்கப்படுகின்ற நிலைமையொன்றென்பதோடு மீண்டும் மீண்டும் சிறைப்படுத்தப்படுகின்ற தரப்பினர்களில் பெரும்பாலானோர் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் என்பது அவதானிக்கப்படுகிறது.



போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவதைத் தடுப்பதற்கெனில் அவர்களை சிறைச்சாலைகளில் சிறைப்படுத்துவதற்கு மாற்று வழியாக முறையான புனர்வாழ்வு முறையொன்றிற்கு உட்படுத்துவது மிகவும் உசிதமாகும். அவ்வாறு இல்லையெனில் அவர்களை மீண்டும் சிறையில் அடைக்கப்படுவதைத் தடுப்பது இலகுவான பணியொன்றல்ல என்பதோடு மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவதன் ஊடாக சிறைச்சாலைகளுக்கும் நிர்வாக ரீதியான பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டி ஏற்படுகின்றது.



இந்த நிலைமைக்கு நடைமுறைச் சாத்தியமானதும் மற்றும் வினைத்திறன் மிக்கதுமான தீர்வொன்றாக வீரவில திறந்த சிறைச்சாலையை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையமாக அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு தற்போது முன்னோடி கருத்திட்டமாக 500 கைதிகளைத் தடுத்து வைப்பதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



இந்நிலையத்தினுள் 2000 கைதிகளை புனர் வாழ்வளிப்பதற்கான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுவதுதோடு, அதற்காக பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படுகின்ற ஏலவே நிருமாணிக்கப்பட்ட கட்டிடங்களைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே போன்று, புனர்வாழ்வளித்தல் வழிமுறைமைக்காக அபாயகரமான ஔடதடங்கள் கட்டுப்பாட்டுத் தேசிய சபை, தொழிற்பயிற்சி அதிகாரசபை போன்ற தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள் என்பவற்றை இணைத்துக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதோடு அதன் மூலம் நவீன தொழில் சந்தைக்குப் பொருத்தமான வகையில் தொழில்சார் அறிவு மற்றும் அனுபவங்களை கைதிகளுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

# திறன் விருத்தி







பல வருடங்களாக வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளுக்காக அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியாமல் போன காரணத்தினால் திணைக்களத்தினுள் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. பொதுவாக நோக்கும் போது திணைக்களத்தினுள் தற்போது 2,000 இற்குக் கிட்டிய தொகையான அலுவலர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதோடு, அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு இது வரை பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

- 65 ஆண் ஜெயிலர்கள், 05 பெண் ஜெயிலர்கள் மற்றும் 12 புனர்வாழ்வு அலுவலர்கள் மற்றும் 02 புனர்வாழ்வு பெண் அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலைப் பயிற்சிக் கல்லூரியில் அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்த பின்னர் சிறைச்சாலை நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

- 12 வருட சேவைக் காலத்தின் பின்னர் சட்டரீதியாக முப்படைகளிலிருந்து விலகிய 200 உத்தியோகத்தர்களை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் SPEAT FORCE இற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பூஸ்ஸ இராணுவ முகாமில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- சிறைச்சாலை சிறைக்காவலர் அலுவலர்கள் 788 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதோடு, தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் நாடு பூராகவும் உள்ள தெரிவு செய்யப்பட்ட 26 சிறைச்சாலை நிறுவனங்களில் 14 நாட்கள் செயன்முறைப் பயிற்சிக்காக இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.



## 12 ஆவது பயிலுநஉ சிறைச்சாலை II ஆம் தர ஜெயிலஉகள் மற்றும் புனஉவாழ்வு அலுவலஉகளின் கலைந்து செல்லல் நிகழ்வு



சிறைச்சாலைத் திணைக்களத்தில் நிலவிய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர் சிறைச்சலை II ஆம் தர ஜெயிலர்கள் மற்றும் புனர்வாழ்வு அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டதோடு, கலைந்து செல்லல் அணிவகுப்பு 2021.11.26 ஆம் திகதி கௌரவ நீதி அமைச்சர் சனாதிபதி சட்டத்தரணி திரு. எம்.யூ.எம். அலி சப்ரி அவர்களின் தலைமையில் அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



# புதிய தொழில்நுட்பத்துடன் ஒன்றிணையும் சிறைச்சாலை

சிறைச்சாலை நிறுவன வளாகங்களில் மற்றும் தனி நபர்களிடத்தில் மறைத்து வைத்திருக்கப்படுகின்ற தடை செய்யப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களை கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற திடீர் தேடுதல் நடவடிக்கைகளை சரியாகவும் மற்றும் மிகவும் வினைத்திறன் கொண்டதாகவும் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்காக சிறைச்சாலை அவசர நடவடிக்கை தந்திரோபாய படையணிக்கு ***Non- linear Junction Detector*** மற்றும் ***Hand held Non- linear Junction Detectors*** உபகரணங்களை 2021 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்துவதற்கும் அவைகளை பயன்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.



அதேபோன்று, நகரப்புறம் சார்ந்த சிறைச்சாலைகளுக்குள் தடைசெய்யப்பட்ட பொருட்களை வீசுகின்ற நபர்கள் மற்றும் அந்த தடைசெய்யப்பட்ட பொருட்களை கண்காணிப்பதற்கும், சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிகள் சிறைச்சாலைகளினுள் மேற்கொள்கின்ற சட்ட விரோதமான நடவடிக்கைகள் மற்றும் நடத்தைகளைத் தொலைவில் இருந்து அவதானிப்பதற்குதம் தேவையான கருவியொன்றான ***Day & Night Camera*** கொண்ட ***Quadcopter (Drone)*** உபகரணமொன்று சிறைச்சாலை அவசரத் நடவடிக்கை தந்திரோபாய படையணியினருக்கு ***(SPEAT Force)*** வழங்கப்பட்டதோடு அதனைப் பயன்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டது.



# சிறைச்சாலைக்கு அவசர நடவடிக்கை தந்திரோபாய படையணி





சிறைச்சாலை உளவுப் பிரிவு மற்றும் பாதுகாப்புப் பிரிவு என்பன கடந்த காலப்பகுதியில் செயலாற்றுகை மந்தமான நிலைமையின் கீழ் செயற்பட்டன. இந்த நிலைமை பாதுகாப்பான ஒரு நாடு, ஒழுக்கமான மற்றும் சட்டத்தை மதிக்கும் ஒரு சமூகத்திற்கான சனாதிபதி செயலணியின் மற்றும் பாதுகாப்புச் செயலாளரின் கவனத்திற்கு உட்பட்டதோடு, அதன்படி, இந்தப் பிரிவின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி, சிறைச்சாலை உளவுப் பிரிவு மற்றும் பாதுகாப்பு பிரிவு என்ற பெயர் இலங்கை சிறைச்சாலை அவசர நடவடிக்கை தந்திரோபாய படையணி (ளுீநுயுவு குழசஉந) எனத்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, சிறைச்சாலைகள் உளவுப் பிரிவையும் இந்த அவசர நடவடிக்கை படையணியின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த அலகினால் நிறுவனத்தினுள் திடீர் சோதனைகளை மேற்கொள்ளல், சிறைச்சாலைக்குள் பிரவேசிகின்ற நபர்கள், வாகனங்கள் மற்றும் பொருட்கள் மற்றும் பண்டங்களைச் சோதனை செய்தல், சிறைச்சாலை நிறுவனங்களில் திடீர் சுற்றி வளைப்பு சோதனைகளை மேற்கொள்ளல், உளவுத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் உரிய விசாரணைப் பணிகளை மேற்கொள்ளல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றது. அதேபோன்று முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவதும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பிரிவின் அலுவலர்களுக்குப் பல புதிய பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு, அவர்களுக்குப் புதிய சீருடையும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இந்த அலகினை மேலும் வலுப்படுத்துவதற்காக அமைச்சரவையின் அனுமதியின் கீழ் முப்படையிலிருந்து சட்ட ரீதியாக விலகிய 200 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பூஸ்ஸ இராணுவ முகாம்யில் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# 102 ஆம் பயிலுநர் சிறைச்சாலை அவசர நடவடிக்கை தந்திரோபாய படையணி அலுவலர்களின் கலைந்து செல்லல் நிகழ்வு

சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு முதல் தடவையாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இலங்கை முப்படைகளில் 12 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்து சட்ட ரீதியாக சேவையிலிருந்து விலகிய 194 உத்தியோகத்தர்கள் சிறைச்சாலை அவசர நடவடிக்கைகள் தந்திரோபாய படையணி அலுவலர்களாக கலைந்து செல்லும் நிகழ்வு 2022.01.26 ஆம் திகதி அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை விளையாட்டரங்கில் பாதுகாப்புச் செயலாளர் நாயகம் திரு. ஜி.டி.எச். கமல் குணரத்ன (ஓய்வு பெற்ற) அவர்களின் தலைமையில் மற்றும் தேசிய உளவுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரால் திரு. ருவன் குலதுங்க அவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஐந்தாண்டு காலத் திட்டத்தில் சிறைச்சாலை நிறுவனங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தல் எனும் நோக்கின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளவாறு அவசர நடவடிக்கைகள் தந்திரோபாய படையணிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள இவ்வலுவலர்கள் விசேட பாதுகாப்பு, கலகம் அடக்குதல் ஆகிய விசேட பணிகளிலும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.











# சிறைச்சாலை உளவுப் பிரிவை மறுசீரமைப்பு செய்தல்





இலங்கை சிறைச்சாலை அவசர நடவடிக்கை தந்திரோபாய படையணியின் கீழ் சிறைச்சாலை உளவுப் பிரிவை வலுப்படுத்தல் மற்றும் அதன் உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் கடந்த பல மாதங்களினுள் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு நடவடிக்கையாகும். அரச உளவுச் சேவை மற்றும் தேசிய உளவுப் பிரிவுடன் இணைந்து உளவுத் தகவல்களைச் சேகரித்து சிறைச்சாலை நிறுவனங்களின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் புலனாய்வுகளை மேற்கொள்ளல், சிறைச்சாலை உளவுப் பிரிவு மற்றும் அரச ஏனைய உளவு பிரிவுகள் ஊடாக திணைக்களத்தில் ஊழல்மிக்க அலுவலர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்டரீதியான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

இப்பிரிவை வலுப்படுத்துவதற்காக பொலீஸ் விசேட அதிரடிப்படை ஊடாக இப் பிரிவின் அலுவலர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு , அரச உளவுச் சேவையின் மூலம் சிறைச்சாலை உளவுப் பிரிவின் 90 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதே போன்று, இப் பிரிவினை பலப்படுத்துவதற்கு பாதுகாப்புச் செயலாளரின், தேசிய உளவுப் பிரிவின் பிரதானி மற்றும் அரச உளவுப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோரின் தலையீடு மற்றும் பங்களிப்பு என்பன பெரிதும் உதவியாக அமைந்தன.





# புதிய பயிற்சிப் பாடசாலையொன்று

வரலாறு முழுவதும் சிறைச்சாலையைப் பயிற்சிப் பாடசாலையாக கொழும்பு சிறைச்சாலை வளாகத்தினுள் அமையப்பெற்றுள்ள சிறைச்சாலைகள் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையம் பயன்படுத்தப்பட்டு வந்ததது. இருப்பினும் பின்வரும் காரணங்களினால் வேறு சிறைச்சாலை பயிற்சிப் பாடசாலைக்கு இணைந்த நிறுவனமொன்றை அங்குணகொலபெலெஸ்ஸ சிறைச்சாலை வளாகத்தில் நிறுவுவதற்குத் தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- கொழும்பு சிறைச்சாலைப் பயிற்சிப் பாடசாலையினுள் ஒரு தடவையில் 80 அலுவலர்களுக்கு மாத்திரம் பயிற்சியளித்தல் வசதிகள் காணப்படுகின்றமை.
- போதுமானளவு விரிவுரை மண்டப வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் என்பன காணப்படாமை.
- பயிற்சிப் பாடசாலையின் தங்கும் விடுதி தற்போது பொலீஸ் விசேட அதிரடிப் படையினர் தங்குவதற்காக குறித்தொதுக்கப்பட்டுள்ளமை.
- எதிர்காலத்தில் 1000 உத்தியோகத்தர்களுக்கு அண்மித்த எண்ணிக்கையானவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளதால், அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்குப் போதியளவு பயிற்சி வசதிகள் இல்லாமை.

அதற்கமைய, அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை வளாகத்தில் போதியளவு வசதிகள் கொண்ட பயிற்சிப் பாடசாலையொன்றை தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதேபோன்று, கொழும்பு சிறைச்சாலை வளாகத்தை ஹொரணை பிரதேசத்திற்குக் கொண்டு சென்றதன் பின்னர், அங்கு அனைத்து வசதிகள் கொண்ட சீர்திருத்தக் கல்விக் கேந்திர நிலையமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்கனவே அலுவல்கள் திட்டமிடப்பட்டுள்ளன.




# சுதந்திரம்

“ நான் எனது சிறைக் கூடத்திலிருந்து வெளியேறி சிறைச்சாலைக் கதவை நோக்கி எனது விடுதலைக்காக நடந்து செல்கின்ற பயணத்தின் போது, நான் புரிந்துகொண்ட விடயம் யாதெனில், கடந்துபோன அந்தக் கடினமான கசப்பான இறந்தகாலத்தையும் மற்றும் அதனோடு தொடர்புடைய வெறுப்பையும் நான் இந்தக் கதவருகில் விட்டுச் செல்லாதவரை , நான் சிறையில் சிறைப்படுத்தப்பட்டவனாகவே இருப்பேனள ”

**– நெல்சன் மண்டேலா**

# கைதிகளின் வாழ்க்கைக்கு இரண்டாவது சந்தர்ப்பம்



நாட்டின் நீதிமன்ற முறைமையின் மூலம் குற்றவாளிக்கு மரணத் தண்டனை வழங்கப்பட்ட போதிலும், மரணத் தண்டனை நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் நீண்டகாலக் கைதிகளுக்கு சிறைச்சாலைக் கட்டளைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நான்கு வருட மீளாய்வு வழிமுறைமை அமுல்படுத்தப்படாமை காரணமாக சிறைக்கைதிகள் சிறைச்சாலைக்குள் அதிகரித்தல் தொடர்ச்சியாக இடமபெறுகின்ற ஒரு செயற்பாடாகும். இதன் விளைவாக, கைதிகளுக்கிடையில் மன அழுத்தம் அதிகரித்தல் மற்றும் சிறைச்சாலைக்குள் கைதிகள் அதிகரித்தல் ஆகியவற்றைக் காணமுடிகின்றது.




அதன்பிரகாரம், அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பாதுகாக்கப்பட்ட ஒரு நாடு, ஒழுக்கமிக்க, நற்பண்பான மற்றும் சட்டத்தை மதிக்கின்ற ஓர் உயர்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக சனாதிபதி செயலணியின் விசேடமான முதன்மைகளின் கீழ் கைதிகள் நெருக்கடியைக் குறைப்பதற்காக பொது மன்னிப்பு வழங்கும் கொள்கை ரீதியான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, மீளாய்வு வழிமுறையொன்றினூடாக விசேட மன்னிப்பு வழங்கும் பொறிமுறையொன்றைத் தயாரித்தல் என்பதையும் உள்ளடக்கி முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

மன்னிப்பு வழங்கும் வழிமுறைமையொன்றை தயாரிப்பதற்குச் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு, ஏனைய உரிய நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற வகையில் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டதோடு, இந்தக் குழுவின் இறுதி அறிக்கையை கௌரவ நீதி அமைச்சருக்கு ஒப்படைப்பதற்கு தற்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அலுவல்களை மேற்கொள்ளும் போது கௌரவ நீதி அமைச்சர், சனாதிபதி சட்டத்தரணி திரு. அலி சப்ரி அவர்கள், சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளித்தல் அலுவல்கள் கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு. லொஹான் ரத்வத்தை அவர்கள் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சர் திருமதி. சுதர்ஷனி பெர்னான்டோ பிள்ளை அவர்கள் ஆகியவர்கள் தேவையான ஆலோசனைகளையும் மற்றும் விசேட பங்களிப்பையும் வழங்கினர்.

# சிறைச்சாலைகள் சர்வதேச தரத்திற்கு



கொழும்பு சிறைச்சாலைக் கட்டிடத் தொகுதி சிறைச்சாலை தலைமையகம், சிறைச்சாலைகள் பயிற்சிப் பாடசாலை, வெலிக்கடை சிறைச்சாலை, கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலை, புதிய மெகசின் சிறைச்சாலை, சிறைச்சாலை வைத்தியசாலை பெண்கள் பிரிவு மற்றும் சிறைச்சாலை உத்தியோகபூர்வ வாசஸ்தலம் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

இத்தொகுதியில் மூன்று பிரதான சிறைச்சாலை நிறுவனங்களான வெலிக்கடை, மெகசின் மற்றும் கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலை ஆகியவற்றினுள் தற்போது மிகவும் நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளதோடு, அவற்றின் கட்டிடங்கள் மிகவும் பழைய கட்டிடங்கள் ஆகும். அந்நிறுவனங்களில் மிகக் குறைந்த வசதிகள் மாத்திரமே கைதிகளுக்கு வழங்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களில் காணப்படும் வரையறுக்கப்பட்ட இடவசதிகள் காரணமாகவும் சிறைச்சாலையைச் சுற்றி சன நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளதாலும் அந்த நிறுவனங்களினுள் போதிய இடவசதிகள் காணப்படாமை காரணமாகவும் புதிய கட்டிடங்களை நிர்மாணிக்கவோ அல்லது மேலும் அந்நிறுவனங்களை விரிவுபடுத்தவோ முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

மேலும், சிறைக் கைதிகளைக் கவனித்தல் தொடர்பிலான தரநியமங்கள் மற்றும் சர்வதேச உடன்பாடுகளுக்கு இணங்கியதாக அந்த தேவைப்பாடுகளை கொழும்பு சிறைச்சாலை நிறுவனத்தினுள் போதுமானவாறு வழங்க முடியாத நிலைமை காணப்படுவதுடன் அதற்கு மாற்று வழியாக இடவசதி மற்றும் ஏனைய வசதிகள் காணப்படுகின்ற சிறைச்சாலை நிறுவனங்களை தாபிக்கவேண்டிய தேவைப்பாடுகள் தோன்றியுள்ளன. மேலும் கொழும்பு சிறைச்சாலைகள் வளாகத்தினுள் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கும் மிகவும் குறைவான வசதிகளுக்கு மத்தியில் கடமையாற்றவேண்டியிருப்பதால் அவர்களும் பல வருட காலமாக சிறமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் அதேபோன்று கொழும்பு சிறைச்சாலைக் கட்டிடத் தொகுதி அமைந்துள்ள காணியின் வர்த்தகப் பெறுமதி காரணமாக நாட்டின் பொருளாதாரப் பெறுமதி மிக்க கருத்திட்டங்களுக்காக இந்நிலத்தை பயன்படுத்தக் கூடிய சாத்தியப்பாடுகளும் காணப்படுகின்றன.

அதன்படி, கொழும்பு சிறைச்சாலை வளாகத்தை, ஹொரண, மில்லேவ பிரதேசத்தில் மீளத்தாபிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, மெகசின் சிறைச்சாலையைப் மீளமைப்பதற்கான அடிப்படைத் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.


இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் வெலிக்கடை சிறைச்சாலை வளாகம் மீளமைக்கப்படவுள்ள ஹொரனை மில்லேவ பிரதேசத்துக்கு

## மேற்கொண்ட களப் பயணம்









# பயிற்சி வாய்ப்புகள்



சிறைச்சாலை நிறுவனங்களில் கடமைகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்கு அன்றாடம் நாட்டின் நீதிமன்ற முறைமை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நேரிடுவது போன்றே நீதித்துறையின் மூலம் குற்றவாளிகள் அல்லது குற்றமொன்றிற்கு சந்தேக நபர்களாக்கப்பட்ட நபர்களுடன் தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் அவர்களுக்கு கடமையாற்ற நேரிடுவது, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் அடிக்கடி ஏற்படக்கூடிய மிகவும் ஆபத்தான மற்றும் அழுத்தம் கொண்ட தொழில் சூழ்நிலையொன்றினுள் என்ற காரணத்தால் அத்தகைய விடயங்கள் தொடர்பாகவும் சிறைச்சாலை நிர்வாகம் தொடர்பாகவும் இற்றைப்படுத்தப்படுகின்ற சர்வதேச சட்டங்கள், ஒழுங்கு விதிகள் தொடர்பாகவும் சிறந்த புரிந்துணர்வொன்று அவர்களுக்கு இருத்தல் வேண்டும்.

ஆதலால், சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு தொடர்ச்சியாக பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குதல் மிக அத்தியாவசியமான ஒரு நிலைமையாகும். அதற்கிணங்க, கடந்த காலப்பகுதியினுள் கொவிட் தொற்றுநோய் நிலைமை காணப்பட்ட போதிலும்,அலுவலர்களுக்குப் பல பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

# அலுவலர்களின் பயிற்சிச் செயலமர்வுகளின் முன்னேற்றம்

**01** சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால் சிறைக் கைதிகளுக்கு வழங்கவேண்டிய ஆகக் குறைந்த தரநியமங்கள் சம்பந்தப்பட்ட இரண்டு பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

**02** UNODC நிறுவனத்தினால் சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் இயக்க நிலைப் பாதுகாப்பு தொடர்பில் அனைத்து சிறைச்சாலை ஆணையாளர்கள், சிறைச்சாலை அத்தியட்சகர்கள் மற்றும் பிரதான ஜெயிலர்கள் ஆகியோருக்காக 05 பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல.

**03** காலி,பூஸ்ஸ,மாத்தறை, அங்குணகொபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறைக்காவலர் உத்தியோகத்தர்கள் மற்றும் சாஜென்ட் உத்தியோகத்தர்களுக்கு UNODC நிறுவனத்தினால் இயக்கநிலைப் பாபாதுகாப்பு சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்.

**04** கரந்தெனிய ஆயுதப் பயிற்சிப் பாடசாலையின் மூலம் சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை தந்திரோபாய படையணியினருக்குப் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.

**05** பொலீஸ் விசேட அதிரடிப்படையின் மூலம் சிரேஷ்ட சிறைச்சாலைகள் அலுவலர்களுக்கும் மற்றும் அவசர நடவடிக்கை தந்திரோபாய படையணியினர்களுக்கும் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.

**06** இராணுவத்தின் மூலம் சிரேட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிப்பட்டறையொன்றை நடாத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**07** ருமேுனுஊ.˙.ஐஊசுஊ ஆகிய நிறுவனங்கள் ஊடாக சிறைச்சாலை முகாமைத்துவம், மண்டேலா விதிகள், இயக்கநிலைப் பாதுகாப்பு, விடய முகாமைத்துவம், பரிசோதித்தல் தொடர்பான பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்காலத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.







“

இந்த தொற்று நோய் நிலைமை வெளிவாரிச் சமூகத்திற்குப் போன்றே சிறைச்சாலை நிறுவனங்களுக்கும் பாரிய சவாலொன்றாக அமைந்துள்ளதோடு. தற்போது சிறைச்சாலைகள் பலவற்றில் கொவிட் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். குறிப்பாக சிறைச்சாலை நிறுவனங்களுக்குள் நிலவுகின்ற இடநெருக்கடி காரணமாக இத்தகைய தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது. மேலும், சிறைச்சாலைகள்
நிறுவனத்திற்குள் உள்ள கைதிகளின் பெரும்பாலானோர் சுகாதார பழக்கங்களை.˙.நடவடிக்கைகளைப் பின்பற்றுவது தொடர்பில் மிகவும் அசமந்தப் போக்குடைய ஒரு பிரிவினராக இருப்பதால் பரிந்துரை செய்யப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதற்காக அவர்களை வழிநடாத்துவது அசௌகரியமான ஒரு பணியாக மாறியுள்ளது.

இருந்த போதிலும், சிறைச்சாலை நிறுவனங்களினுள் கொவிட் 19 தொற்று பரவுவதைத் தடுப்பதற்கும், நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு சிகிச்சையளிக்கவும் விசேட நடவடிக்கைகள் பல ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. இச்செயன்முறையில் சுகாதாரம் அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளடங்கலான பதவியணியினர் மற்றும் கொவிட் தவிர்ப்பு சனாதிபதி செயலணி என்பன விசேட பங்களிப்புக்களை வழங்குவதோடு இது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.



- சிறைச்சாலைகளுக்குள் கைதிகளின் தொகையைக் குறைப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு அலுவல்கள் அமைச்சு மற்றும் பொலீஸ் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்.

- நீதிமன்றங்களிலிருந்து சிறைப்படுத்தப்படுகின்ற கைதிகளை தனிமைப்படுத்துவதற்காக பல்லன்சேனை, பூஸ்ஸ மற்றும் பழைய போகம்பர சிறைச்சாலை நிறுவனங்களை தனிமைப்படுத்தல் நிலையங்களாகப் பயன்படுத்தல்.

- கொவிட் - 19 பீடிக்கப்பட்ட நோயாளிகளாக இனங்காணப்பட்ட கைதிகளுக்கு சிகிச்சையளிக்கும் நிலையங்களாக அய்யக்கச்சி இராணுவ முகாம், பள்ளேகலை திறந்த வெளிச் சிறைச்சாலை, தல்தென இளம் தவறாளிகள் பயிற்சிக் கல்லூரி சிறைச்சாலை நிறுவனம், வட்டரெக்க சிறைச்சாலை வேலை முகாம், அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை பெண்கள் பிரிவு, வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலை மற்றும் அம்பேபுஸ்ஸ பபோதா மெத் செவன சிறைச்சாலை அகிய நிறுவனங்கள் சுகாதார சேவை ஊழியர்களின் மேற்பார்வையின் கீழ் பேணிவருதல்.

- கொவிட் - 19 தொற்று நிலைமை சம்பந்தமாக சிறைக்கைதிகளின் தகவல்களை உறவினர்களுக்கு வழங்குவதற்காக தகவல் மையமொன்றினை அமைத்தல்.

- சிறைச்சாலை அலுவலர்களுக்கு தடுப்பூசி ஏற்றலின் கீழ் இரண்டு தடுப்பூசிகளையும் தற்போது உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு தடுப்பு மருந்தேற்றலை ( தடுப்பூசி) ஆரம்பித்தல்

# பழைய போகம்பரைக்கு சிறைச்சாலை நூதனசாலையொன்று





சிறைச்சாலைகள் திணைக்களத்தின் வரலாற்றினுள் போகம்பரை சிறைச்சாலைக்கு விசேட முக்கியத்துவமொன்று கிடைப்பதோடு, இந்த சிறைச்சாலை வளாகம் பல்லேகலையில் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து பழைய போகம்பரைச் சிறைச்சாலை அமையப்பெற்றுள்ள காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டது. இருப்பினும், அங்கு ஏனைய அபிவிருத்தி அலுவல்களை மேற்கொள்ளும் போது இலங்கையில் முதன்முறையாக சிறைச்சாலை நூதனசாலையொன்றை அந்தக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் நிர்மாணிப்பதற்காக முன்மொழிவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கமைய, இந்த இடத்தில் இலங்கையின் சிறைச்சாலை முறைமையின் விரிவாக்கம் இலங்கையின் அரசர்கள் காலத்திலிருந்து தண்டனை முறைகளின் பரவல், இலங்கையில் குற்றவியல் நீதி முறைமை, இலங்கைச் சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற வரலாற்றுப்ஃபண்டைய பொருட்கள், சிறையில் அடைக்கப்பட்டிருந்த விசேட கைதிகள் பற்றிய வரலாற்றுத் தகவல்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்ட சீருடைகள் மற்றும் ஏனைய உபகரணங்களின் பரவல் உள்ளடங்கலாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களைப் பொதுமக்கள் பார்ப்பதற்கும் மற்றும் இது தொடர்பாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கின்ற தரப்பினர்களுக்குப் புரிந்துணர்வை வழங்குவது இதன் நோக்கமாகும்.

இந்த இடத்தில் அரும்பொருட்காட்சிச்சாலைக்கு மேலதிகமாக சிறைச்சாலை உற்பத்திகள் விற்பனை நிலையமொன்றையும் மற்றும் சிறைச்சாலை வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பின்னணியை கொண்ட உணவகமொன்றை தாபிப்பதற்கும், அந்த உணவகத்தின் கட்டமைப்பை சிறைச்கூடங்களின் இயல்பையொத்ததாக அமைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த இடம் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளது.

இச்செயற்றிட்டம் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு தொடர்பான இராஜாங்க அமைச்சர் கௌரவ லொஹான் ரத்வத்தை அவர்களினதும் மற்றும் அந்தஅமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரால் வீ.ஆர். திரு. சில்வா அவர்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

# சிறைச்சாலைகள் சேவையை சர்திருத்தச் சேவையொன்றாக மாற்றுதல



"LEADERS OF CORRECTIONS"

கைதிகளைக் கவனித்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆகக்குறைந்த தரத்திற்கு இசைவாக வலயத்தின் ஏனைய நாடுகள் சிறைச்சாலைச் சேவையை சீர்திருத்தச் சேவையொன்றாகத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதோடு, முறையான வழிமுறைகளுக்கு அமைவாக அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், பயிற்சியளித்தல் மற்றும் பதவி உயர்வுகள் வழங்குதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன.

இருந்தபோதிலும், இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களம் வசம் முறையாக அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்பொன்று இல்லாமை காரணமாக ஆட்சேர்ப்பு, பயிற்சியளித்தல், பதவி உயர்வு வழங்குதல் போன்றவற்றின் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் ஒரே பதவிக்காக பல்வேறுபட்ட ஆட்சேர்ப்பு முறைகளைப் பின்பற்றுவதற்கு நேரிடுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

மேலும், பெரும்பாலான பிராந்திய நாடுகளில் சிறைச்சாலைகளின் எண்ணக்கரு சீர்திருத்த எண்ணக்கருவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு இலங்கையும் சிறைச்சாலைச் சேவையை சீர்திருத்தச் சேவையொன்றாக மாற்றி தொழில்சார் சேவையொன்றாகத் தாபிப்பது காலத்தின் தேவைப்பாடாக உள்ளது.

அதன்படி, சிறைச்சாலைச் சேவையை சீர்திருத்த சேவையொன்றாக மாற்றுவதற்குத் தேவையான சேவைப் பிரமாணக்குறிப்பு தயாரிக்கப்பட்டு தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

# கைதிகளுக்கான தங்குமிட அபிவிருத்தி



சிறைச்சாலை நிறுவனங்களில் கடுமையான இடநெருக்கடி நிலவுதால், மேலும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான இடவசதிகள் கொண்ட சிறைச்சாலை நிறுவனங்களில் நிரந்தர மற்றும் ஏலவே நிருமாணிக்கப்பட்ட கட்டிடங்களை நிர்மாணிப்பதன் மூலம் இந்த நெரிசலைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிர்மாணப் பணிகள் இராணுவம், கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் முழுமையான ஒத்துழைப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்ற செயற்றிட்டங்களாகும்.

## நிரந்தரக் கட்டிட நிர்மாணங்களின் முன்னேற்றம

நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணித்தல் பணிகள் தற்போது பல்லேன்சேனை சிறைச்சாலையில் இடம்பெற்றுவருதோடு, தற்போது அங்கு நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற நான்கு கட்டிடங்களின் கட்டடப் பணிகள் நிறைவடையும் கட்டத்தில் உள்ளன.

## ஏலவே நிருமாணிக்கப்பட்ட கட்டிட நிர்மாணங்களின் முன்னேற்றம்

ஏலவே நிருமாணிக்கப்பட்ட கட்டிடங்களை வாரியபொல, மெகசின், தும்பர, களுத்துறை மற்றும் மஹர ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களினுள் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், தும்பர சிறைச்சாலை தவிர்ந்த ஏனைய சிறைச்சாலைகளில் இந்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, வாரியபொல சிறைச்சாலையின் ஒரு கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடையும் கட்டத்தில் உள்ளது.

# கைதிகள் உழைப்பினால சேதனப் பசளை








அதிமேதகு சனாதிபதி அவர்களின் “சுபீட்சத்தின் தொலைநோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய நச்சுத்தன்மையற்ற இலங்கையை உருவாக்கும் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு அலுவல்கள் தொடர்பான கௌரவ இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிகளின் ஊழியப் பங்களிப்புடன் சேதனப் பசளை ( உரம்) உற்பத்தி மற்றும் நச்சுப் பொருட்களற்ற மரக்கறி மற்றும் பழவகைகளை சிறைச்சாலைகள் சார்ந்து உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமொன்று மட்டக்களப்பு திறந்தவெளி சிறைச்சாலை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

”வளமான” சிறைக் கூடத்தில் இருந்து விவசாய நிலத்திற்கு என்ற கருப்பொருளை முதன்மையாகக் கொண்ட இந்த செயற்றிட்டம் எதிர்காலத்தில் வீரவில, கதுருகஸ்ஆரா, தல்தென, ஹங்கிலிபொல மற்றும் அனுராதபுரம் போன்ற திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது கைதிகளின் புனர்வாழ்வுச்˙ செயற்பாடுகளின் பிரகாரம், அவர்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத்தலும், அவர்களுக்கு சுயதொழிலுக்குத் தேவையான தொழிற் பயிற்சியை வழங்குதலும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## கொவிட் தொற்றுநோயை வெற்றி கொள்வதற்கான ஓர் அவசர திட்டம்

மிக விரைவாக உலகளாவிய ரீதியில் பரவிய கொவிட் தொற்று சிறைச்சாலைகளுக்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இதற்கு முக்கியமான காரணம் கொவிட் தொற்றுநோய்ப் பரவலைத் தடுப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்ட தீர்வாகிய சமூக இடைவெளியை சிறைச்சாலைகளினுள் மேற்கொள்வது மிகவும் கடினமான பணியாகக் காணப்பட்டமையாகும். இதன் விளைவாக, பாரியளவு சிறைச்சாலை இடநெருக்கடிக்கு மத்தியில் மற்றும் சமூக இடைவெளியை பேணுவதற்கான அசௌகரியமான நிலையில் சிறைக்கைதிகளையும் மற்றும் அலுவலர்களையும் இந்த தொற்றிலிருந்து விடுவித்துக்கொள்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குப் பாரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.





அதன்படி, ஐக்கிய நாடுகள் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் அலுவலகத்தின் அனுசரணையுடன் சிறைச்சாலைக்குள் கொவிட் தொற்றை ஒழிப்பதற்கான அவசர திட்டமொன்றைத் தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, சிறைச்சாலை ஒன்றினுள் அன்றாடம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளின் போது கொவிட் தொற்றிலிருந்து பாதுகாத்து அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விதம் போன்று ஏதோவொரு விதத்தில் அதிகாரியொருவர் அல்லது கைதியொருவர் தொற்றுக்கு ஆளானால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் வழிகாட்டலொன்று இதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது.



## விடய முகாமைத்துவத்திற்கு ஓர் அவசரத் திட்டம்





சிறைச்சாலைக்குள் குழப்பமான ∴ கலவரமான நிலைமைகள், உணவுப் பகிஷ்கரிப்பு, கூறைகள் மீது ஏறி ஆர்ப்பாட்டம் செய்தல், சிறைக்கைதிகள் அல்லது அலுவலர்கள் பணயக் கைதிகளாக எடுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் சிறைச்சாலைகளில் அறிக்கையிடப்படுகின்றன. அத்தகைய சில நிகழ்வுகள் சில சந்தர்ப்பங்களில் உயிர், உடமை சேதங்களுடன் நிறைவுபெறுகின்றன. ஆதலால், அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கும், அவ்வாறான நிகழ்வொன்று ஏற்படுமாயின் அதனை உயிர் மற்றும் சொத்துக்கள் சேதமின்றி முகாமைத்துவம் செய்வது அத்தியவசியமான நிலைமை ஒன்றாகும்.

அதன்பிரகாரம், மேற்படி சம்பவங்கள் சிறைச்சாலைகளினுள் ஏற்படுமிடத்து உயிர் மற்றும் சொத்துக்கள் இழப்புகள் ஏற்படாத வகையில் அவற்றை தொழில்முறை அணுகுமுறையுடன் முகாமை செய்வதற்குத் தேவையான வழிகாட்டல்களுக்காக சிறைச்சாலைத் தலைமையகம் மற்றும் சிறைச்சாலைகள் நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளை இணைத்துக்கொண்டு ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்தின் உதவியுடன் அவசரத் திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# நீதித்துறை அபிமானத்துடன் வடக்கு மாகாண மக்களின் நீதிக்கான முன்னெடுப்பு

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை யதார்த்தம் கொண்டதாக நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் நீதி அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களைக் கிராமத்திற்குக் கிராமம் மற்றும் வீட்டிற்கு வீடு கொண்டு செல்கின்ற நீதித்துறை அபிமானத்துடன் வடக்கு மாகாண மக்களின் நீதிக்கான முன்னெடுப்பு நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வு 2022.01.27 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய மஹா வித்தியாலயத்தில் மிகச் சிறப்பான முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி நிகழ்ச்சித்திட்டம் 2022.01.28 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டதோடு 29,30 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் மத்திய மஹா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.

அதற்கமைய, நீதி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சகல நிறுவனங்களினாலும் ஆற்றப்படுகின்ற பணிகள் தொடர்பாக வட மாகாணத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் பொதுமக்களை அறிவுறுத்தல் மற்றும் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக வட மாகாண மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பன இதன் அடிப்படை நோக்கமாகக் காணப்பட்டது. இந்த நடமாடும் சேவையில் சிறைச்சாலைகள் திணைக்களம் உயிர்ப்புடன் (தொழிற்படு ரீதியாக) பங்குபற்றியதோடு, அதன்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளைப் பொது மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- சிறைச்சாலைகளில் சிறைப்படுத்தப்பட்டுள்ள சிறை∴சந்தேக கைதிகளின் உறவினர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குதல்
- தற்போது காணப்படுகின்ற கொவிட் - 19 நிலைமையின் கீழ் கைதிகளைப் பார்ப்பதற்கு முடியாமல் போன வட மாகாணத்தின் சிறை∴சந்தேக கைதிகளின் உறவினர்களுக்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள ந-எளைவை தொழில்நுட்பத்தின் மூலம் இலங்கையின் எந்தவொரு சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு விருந்தினர்களைப் பார்வையிடுவதற்கான வசதிகளை அச் சந்தர்ப்பத்திலேயே ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்தல் செயன் முறைகள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்துதல்.
- வட மாகாணத்தின் சிறை / சந்தேகக் கைதிகளின் சட்டப் பிரச்சினைகளுக்கான சட்ட உதவியைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்கல்.
- சிறைச்சாலை ஆண் அலுவலர்களின் மற்றும் பெண் அலுவலர்களின் பிரச்சினைகளுக்கான தேவையான தீர்வுகளை வழங்குதல்.
- வட மாகாணத்தின் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பாடசாலைச் சிறார்கள் போதைப் பொருட்களுக்கு மற்றும் பல்வேறு குற்றச் செயல்களின் பால் ஈர்க்கப்படுவதைத் தடுப்பதற்காகப் பாடசாலை பிள்ளைகளை விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்றை மேற்கொள்ளல்

இதனோடு இணைந்ததாக கௌரவ நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி திரு. அலி சப்ரி அவர்கள் யாழ்ப்பாணச் சிறைச்சாலையை அவதானிப்பதற்கான விஜயமொன்றையும் மேற்கொண்டார். அந்த விஜயத்தின் போது கௌரவ நீதி அமைச்சருடன் நீதி அமைச்சின் செயலாளர் திரு. எம். எம். பீ. கே. மாயாதுன்ன அவர்களும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் திரு. துஷார உபுல்தெனிய அவர்களும் மற்றும் சிரேட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


ACCESS
TO
JUSTICE















# புனர்வாழ்வு

## நிகழ்ச்சித்திட்டங்கள்

# “ அமதிவி ரித்ம – ஒன்றிணைந்து போதையிலிருந்து மீள்வோம் ”









- இது போதைப் பொருட்களுக்கு அடிமையான கைதிகளைப் புனர்வாழ்வளித்தல், சிறைப்படுத்தப்பட்டவர்கள் போதைப்பொருட்கள் பாவனைக்கு பழக்கப்படுவதைத் தடுப்பதை நோக்காகக் கொண்டு “அமதிவி ரித்ம - ஒன்றிணைந்து போதையிலிருந்து மீள்வோம்” என்ற தொனிப்பொருளின் கீழ் சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் ஒழிப்பு விசேட செயற்றிட்டமொன்றாக ஆரம்பிக்கப்பட்டது.

- இது முன்னோடிச் செயற்றிட்டமாக கொழும்பு சிறைச்சாலைகள் மூன்றினை மையப்படுத்தி செயல்படுத்தப்படுகின்றது.

- சிறைச்சாலைக் கைதிகளுக்கு மத்தியில் போதைப்பொருள் எதிர்ப்பு மனநிலை கொண்ட கைதிகளை குழுத் தலைவர்களாகப் பயிற்றுவித்து அவர்கள் ஊடாகப் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களை அதிலிருந்து விடுவிக்கும் நோக்கில் இந்தக் கருத்திட்டம் உருவாக்கப்பட்டது.

- இதன் இரண்டாவது கட்டத்தைச் செயற்படுத்துவதற்கான புனர்வாழ்வு நிலையங்களாகப் பெயரிடப்பட்டுள்ள பள்ளேகலை,வட்டறக்க, தல்தென, வீரவில, அனுராதபுரம், பல்லன்சேனை, கந்தேவத்தை, மீதிரிகல, களுத்துறை, அம்பேபுஸ்ஸ ஆகிய நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, அதன் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

# வாசிப்பின் ஊடாக கைதிகள் புனஉவாழ்வு



நீதிமன்றங்களால் பல்வேறு குற்றங்களுக்கு குற்றவாளிகளாக்கப்பட்டு சிறைச்சாலைகளில் சிறையிடலிடப்படுகின்ற கைதிகளின் உளவியல் வளர்ச்சியை ஏற்படுத்தவும்,அவர்களின் அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தவும்,அதனூடாக சிறந்த மனப்பாங்கு விருத்தியை கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்டு நூலகச் சேவைச் சபையுடன் ஒன்றிணைந்து அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களிலும் நூலகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நூலக நடைமுறைகள் தொடர்பாக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. தற்போது சிறைக் கைதிகளால் தயாரிக்கப்பட்ட “அனுவசவ ஆசாவ” என்ற என்ற சிறுகதைதொகுப்பு மற்றும் “சிபிரிகே பாமுல” என்ற கவிதைத்தொகுப்பையும் வெளியிடுவதற்குத் எமது திணைக்களத்திற்குக் சாத்தியம் கிட்டியது. மேலும் இதற்கு மேலதிகமாக, “சிபிரிகே பாமுல 2” கவிதைத் தொகுப்பை துரிதமாக வெளியிடுவதற்குத் தற்போது அலுவல்கள் திட்டமிடப்பட்டு வருகின்றன. இதனூடாக் கைதிகளின் திறன் விருத்தி மற்றும் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் முடிந்துள்ளதால் நூலக நடவடிக்கைகளை விதி முறையான அடிப்படையில் தயாரித்து, தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தி அதன் மூலம் கைதிகளை நல்ல பிரசைகளாக சமூகமயப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பணிகளை வெற்றிகரமான மேற்கொள்வதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக கொழும்பு வெஸ்லி வித்தியாலயத்தின் சாரணர் சங்கத்தின் அனுசரணையுடன் வட்டரெக்க இளம் தவறாளிகள் பயிற்சிக் கல்லூரியின் நூலகம் நவீனமயப்படுத்தப்பட்டது.

# பகுதியளவு சிறைச்சாலைகள் எண்ணக்கருவை அமுல்படுத்தல்



பகுதியளவு சிறைச்சாலைகள் எண்ணக்கரு என்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகள் காலையில் சிறைச்சாலையிலிருந்து வெளியேறிச்சென்று வெளி நிறுவனங்களுக்கு தமது உழைப்பை வழங்கி நாளின் இறுதியில் மீண்டும் சிறைச்சாலைக்கு வருகின்ற ஒரு முறையாகும். இதனூடாக கைதிகளின் உழைப்பு பயனுள்ளதாகப் பயன்படுத்தப்படுவதோடு, அந்தக் கைதிகளுக்குரிய தொழில் தேர்ச்சிகளும் கிடைக்கின்றன. அதன்போது கைதிகளுக்கு தமது உழைப்புக்காக சம்பளமும் கிடைக்கின்ற அதேவேளை புனர்வாழ்வுச்˙ செயற்பாடுகளுக்கும் பெரிதும் உதவியாக அமைகின்றது.

இந்த எண்ணக்கரு தற்போது வட்டரெக்க திறந்தவெளி வேலை முகாமில் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, அந்தக் கைதிகள் தற்போது எவன்ட் கிரேட் நிறுவனத்தின் செயற்றிட்டங்களில் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தினமும் காலையில் சென்று பணி முடிந்து மீண்டும் சிறைச்சாலைக்கு வருகைதருவதோடு அங்கு அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற சம்பளம் கிடைப்பதோடு, அவர்கள் ஈடுபடும் தொழில் தொடர்பிலான திறன்களும் கிடைக்கிறன.









# வாரந்தப் பாடசாலை

பல்வேறு குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றங்களினால் தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்ற கைதிகளை நல்ல பிரசைகளாக சமூகமயப்படுத்தும் புனர்வாழ்வுச் · செயற்பாடுகளின் மிக முக்கியமான நிகழ்ச்சித் திட்டமொன்றாக வணக்கத்திற்குரிய. உடஈரியகம தம்மிஜீவ தேரர் அவர்களின் ஆலோசனையில் வண. அத்துருகிரிய தம்மிவிஹாரி தேரர் அவரகள் நடாத்துகின்ற வெற்றிகரமான வாழ்க்கைக்கான திறவுகோல்" என்ற நிகழ்ச்சித்திட்டம் அனைத்து சிறைச்சாலைகளிலும் கைதிகளுக்காக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நிலவுகின்ற கொவிட் தொற்று நிலைமை காரணமாக இணைய வழியூடாக இந்நிகழ்ச்சித்திட்டம் கடந்த காலத்தில் நடாத்தப்பட்டன.

தற்போது, இந்நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் சகல சிறைச்சாலை நிறுவனங்களிலும் கடமை புரிகின்ற புனர்வாழ்வு அலுவலர்களுக்காக நடாத்தப்படுவதோடு, எதிர்காலத்தில் குழுக்களாக ஏனைய உத்தியோகத்தர்களுக்காகவும் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்படவுள்ளது.

மீண்டும் மீண்டும் சிறைச்சாலைக்குச் செல்வதற்கான பிரதான காரணம் கைதிகள் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் முறையான வகையில் மேற்பார்வை செய்யப்படாமை மற்றும் அவர்கள் மீண்டும் ஒரு தடவை அந்தச் சூழலுக்கும் மற்றும் அவர்கள் சிறைச்சாலைக்குச் செல்வதற்கு முன்னர் பழகிய ஆட்களுடனும் தொடர்புபடுவது ஆகும். மேலும், அவர்களுக்கு வாழ்வதற்குப் போதியளவான மற்றும் பொருத்தமான வாழ்வாதார வசதிகள் இல்லாமையும் அவர்கள் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவதற்கான ஒரு காரணம் ஆகும்.

அதன்பிரகாரம், சிறைச்சாலை நிறுவனங்களிலிருந்து விடுதலை செய்யப்படுகின்ற கைதிகளை முறைப்படி சமூகமயப்படுத்தல் மற்றும் மீண்டும் சிறைச்சாலைக்குச் செல்வதைக் குறைப்பதற்காக குடும்ப நலனோம்பல் சகிதம் பின்பொறுப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை நாடளாவிய ரீதியில் ஒழுங்கமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. அதன்படி, மீண்டும் சிறைச்சாலையில் சிறைப்படுத்தப்படுவதைத் தடுப்பதனை நோக்காகக் கொண்டு விடுதலை பெற்ற கைதிகளுக்கு முறையான வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக வழிகாட்டுதல் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக அரச உத்தியோகத்தர்களின் பொறிமுறை மூலம் அவர்களை பாதுகாப்பான வகையில் சமூக அங்கீகாரத்துடன் சமூகமயமாக்குவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் போது பிரதேச செயலாளரின் தலைமையிலும் மற்றும் சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைச்சாலை புனர்வாழ்வு அலுவலர்கள் ஆகியவர்களின் பங்கேற்புடன் பின்பொறுப்புக் குழுக்களைத் தாபித்து அந்தக் குழு கூடி முன்னேற்றத்தை மீளாய்வு செய்கிறது.

பாதுகாப்பான நாடு , ஒழுக்கமான மற்றும் நற்பண்புகள் நிறைந்த, சட்டத்தை மதிக்கும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணியினால் கவனம் செலுத்த வேண்டிய பணிப்பொறுப்பொன்றாக மீண்டும் மீண்டும் சிறைச்சாலைக்கு செல்வதைத் தடுப்பதற்காக முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்தல் தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இந்நிகழ்ச்சித்திட்டத்தை முறையாக செயற்படுத்துவது மிகவும் பயனுடையதாக அமையும். அதன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி கொழும்பு மாவட்டச் செயலகத்தில் பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் அனைத்து மாவட்டச் செயலாளர்களையும் இணைத்துக்கொண்டு நடாத்தப்பட்ட கூட்டத்தில் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை முறையாக மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**பதிப்பாசிரியர்** | **தயாரிப்பு எண்ணக்கரு**



*அஜித் பஸ்நாயக*
சிறைச்சாலை அத்தியட்சகர்



*கே. மகதந்தில*
துணை பணிப்பாளர் ( திட்டமிடல் )



*கெலும் ஹெட்டிகொட*
சிறைக் காவலர்



சிறைச்சாலைகள் தலைமையகம், கொழும்பு - 09.